# கதை கதையாம் காரணமாம்




**தமிழ் ஐயா வெளியீட்டகம்**

ஔவைக்கோட்டம், திருவையாறு - 613 204

தஞ்சாவூர் மாவட்டம்.

# 93. சங்க இலக்கியங்களில் காப்பியங்களில் கதை மாந்தர்கள்

முனைவர் க.சம்பத்ராணி
துணைப்பேராசிரியர்
அவினாசிலிங்கம் மகளிர் பல்கலைக்கழகம்
கோவை

## முன்னுரை

'ஊமையராய் செவிடர்களாய் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒரு சொல் கேளீர்"

என்ற பாரதியின் வாக்கிற்கு இணங்க, சங்க இலக்கியங்களில் அகப்பாடல்களிலும், புறப்பாடல்களிலும் பல்வேறு காட்சிகளில், நிலைகளில் ஊனமுற்றோர் காணப்படுகின்றனர். இங்கு அறநூல் தளத்தில் சிறிது வேறுபடவும் கையாளபடுகின்றனர். இவ்வாறான கதாபாத்திரங்கள் தொல்காப்பியம் முதல் பெரியபுராணம் வரையிலான இலக்கண இலக்கியங்களிலும் நிகண்டுகள், அகராதிகள் போன்றவற்றையும் களனாகக் கொண்டு காணப்படுகின்றன.

அறம் உணர்த்தவும் கருத்து விளக்கத்திற்காகவும் நேர்நிலையிலும், எதிர்நிலையிலும் ஊனம் செய்தி கையாளப்பெற்று, ஊனம் பற்றி ஒரு குறிப்பிட்ட இலக்கிய காலப்பகுதியின் சமூக எண்ணத்தைப் புலப்படுத்துகின்றன. ஊனம் பழிப்புக்கும் இழிப்புக்கும் உட்படுதல், குறியீட்டுப் பொருள் நிலையில் ஆளப்படுதல். பழவினை நம்பிக்கை சார்பில் அணுகப்படுதல் இது போன்றப் பல்வேறு எடுத்துக்காட்டுகளாகச் சங்க இலக்கியங்களில் ஊனமுற்றோர் காட்டப்பட்டுள்ளனர். ஊனம் ஊனர் பற்றிய தரவுகளைத் தேடும்போது அவற்றின் வருகையில் சில சான்றுகள் தென்படுகின்றன.

## ஊனம்

ஊனம் என்ற சொல்லுக்கு குற்றம், குறைபாடு, பழி, தீமை, அழிவு என்ற பல பொருண்மைகள் கூறப்படுகின்றது. ஊனம் என்ற சொல்லுக்கான அடிப்படை பொருண்மை உடற்குறை என்பதாகும். ஆனால் உடற்குறை என்ற பொருண்மையை விட பிற பொருண்மையின் பெருக்கை நாம் அறநூல்களில் காணலாம்.

"நாலாயிர திவ்ய பிரபந்தத்தில்,

ஏத்த வல்லார்க்கு இல்லை ஊர் ஊனமே (2213)

ஊனமில் செல்வம் என்கோ ஊனமில் சுவர்க்கம் என்கோ

ஊனமில் மோக்கம் என்கோ ஒளிமணி வண்ணனையோ" (2343)

என்பன வருகைகளில் அழிவு, கேடு, இறை எனும் பொது பொருண்மையையே கொண்டு மரபு தொடர்ச்சி வழங்குகின்றது. ஊனம் பல்வேறு வகைகளாக நம் உடலில் தென்படுகின்றது. அவற்றை நாம் குருடு, செவிடு, ஊமை, மூக்கிலி, முடம், கூனும், குறளும், மருள் போன்ற பெயர்களால் நாம் குறிப்பிடுகின்றோம். எனினும் அக்கால கதைகளிலும், காப்பியங்களில் அவர்கள் முக்கியமான கதாபாத்திரங்கள் ஆகவே காட்டப்பட்டுள்ளனர்.

## காப்பியங்களில் ஊனமுற்றோரின் கதாபாத்திரங்கள்

ஊனமுற்றோர்களுக்குச் சங்க இலக்கியங்கள், காப்பியங்கள் ஆகியவை ஒரு களனாகக் காணப்படுகின்றனர். கம்பராமாயணத்தில்

அறநூல்களில் அமையும் குறை (ஊனம் ஒன்று இன்றி. இனியவை 3) குற்றம் (ஊனம் பிறரை உரையான்; ஏலாதி 32) பழி (ஊனம் இனி இலதாகுக இளங்கோக்கு. கம்பராமாயணம் 9065) தீமை (ஊனமில் பெருங்குணமுடைய கம்பராமாயணம் 856) குறை (ஓர் ஊனங் கண்டேன். ஒட்டினும் ஒட்டேன் உரைக்குற்றேன். சூளாமணி 309) என்பன போல பல்வேறு பொருண்மைகளில் பல்வேறு காப்பியங்கள். அறநூல்களில் ஊனம் இடம்பிடித்திருக்கிறது.

சமய பக்தி சார்புடைய இலக்கிய களன் இப்பொருள் தொடர்ச்சியின் சில அரிய புதிய பரிமாணங்களை அளிப்பது புலப்படுகிறது. உடம்பு பிணி. பிறவி எனும் பொருண்மைகள் இந்நிலையில் குறிப்பிடத்தக்கன.

"ஊனமாம் உடம்பினில் உறுபிணிகெட-சம்பந்தர்தேவாரம்.284.7.
ஊனமாயின பிணி அவை கெடுத்து - சம்பந்தர் தேவாரம். 292.6
ஊன சம்பந்தத்து உறுபிணி நீங்கி - சம்பந்தர் தேவாரம். 377.11
நம்மை ஊனம் அறுத்த பிரான் - சம்பந்தர் தேவாரம். 106.3
ஊனந்தன்னை ஒருங்குடன் அறுக்கும் - திருவாசகம்.2.105"

தேவார திருவாசகங்கள் தரும் இப்புலப்பாடுகள் தனித் தன்மையுடையன.

கூனியும், சீவகசிந்தாமணியில் விசையையின் தோழியாகச் செண்பகமாலை எனும் கூனியும் : காந்தருவ தத்தையின் தோழியாக வீணாதிபதியெனும் பேடியையும் சுட்டுகின்றது. மேலும் பதுமாபதியின் தோழியாக விச்சுவலேகையெனும கூனி; மகாபாரதத்தில் திருதராட்டிரனின் காண்பார்வையற்ற பாங்கு; பெரியபுராணம் தண்டியடிகளைப் பார்வையிழந்தவராகக் காட்டுவதிலும் ஊன பாத்திரநிலை காப்பியத்தில் பொருந்துகிறது. மேலும் தொல்காப்பியம், சங்க இலக்கியம், கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சிந்தாமணி, நாலாயிரம், திவ்ய பிரபந்தம், கம்பராமாயணம், முத்தொள்ளாயிரம் முதலியனவற்றிலும் நீலகேசி, சூளாமணி, திருமுறைகள் கல்லாடம், பெரியபுராணம், நிகண்டு, பழமொழி, விடுகதை போன்றவற்றிலும் ஊனமுற்றோரின் வருகை காணப்படுகின்றது.

மேலும், கூனுங் குறளும் ஊனமுங் கூடிய குறுந்தொழில் இளைஞர் என்பது சிலம்பு. புத்த ஞாயிறு தோன்றும் போது ஊனர் 'பிறவார் என மணிமேகலையில் கூறப்படுகிறது. திருமந்திரம் ஊனப் பிறவிகள் காரணம் பற்றி உடலியல் ரீதியாக விளக்குவது பிற இலக்கியக் கலனில் தென்படாத தன்மையுடையது.

## சங்க இலக்கியங்களில் ஊனமுற்றோரின் வெளிப்பாடு

கீழ்க்கணக்கு அறநூல்கள் அறிவுரை கூற வாய்ப்பாக அறம் கூற எடுத்துக்காட்டாக உவமையாக ஊனச் செய்திகளைப் பயன்கொள்கின்றன. துஞ்சு ஊமன் கண்ட கனா உவமையாகிறது. பகையகத்துப் பேடி கை ஒள்வாள் என உருவகத் தோற்றம் கொள்கிறது.

'புழுங்கல் நெல்லின் பொரி வீழ்த்து என்ன
நுண்குழிப் புற்றின் மண் கால் ஈயல்
கோல் பிடி குருடர் ஏய்க்கும்"

என்பது ஐங்குறுநூற்றில் அமைந்த ஊனம் சார்ந்த உவமையாகும். மேலும் பழமொழித் தொடர்களில் துஞ்சு புலி இடறிய சிதடன், குருட்டுக்கண் துஞ்சிலென் துஞ்சாக் காலென் தொடர்களும் ஊனச் சார்புடன் வெளிப்படுகிறது.

## ஊனம் திறமைக்குத் தடையல்ல - சான்று

சிந்தாமணியில் அரசி விசயையின் தோழியான

செண்பகமாலை அறிவில் சிறந்தவளாக அமைகிறாள். காந்தருவ தத்தையின் தோழியாக வரும் வீணாதிபதி அழகு நிறைந்தவளாகவும், இசைவல்லவளாகவும் யாழ்ப்போட்டியை முன்னின்று நடத்துபவளாகவும் அமைகிறாள். கம்பராமாயணத்தில் கைகேயின் தோழியான மந்தரை சொல்வளம், பேச்சுபலம் நிறைந்தவளாகக் காணப்படுகிறாள். பெருங்கதையில் போகக் கலப்பை பொறுத்த கூன்குறள், குறிவியினின்ற குறள் எனப் பலமுறை சுட்டிக்காட்டி அரசுப் பரிவாரத்தில் இவர்க்குள்ள இடத்தைக் காட்டுகிறது. பின்புல ஊழையராக இவர் அமைய முன்புல மாந்தராகவும் அமைவார். திறமையும், தேர்ச்சியும் உடையவராகக் காட்டப்படுகிறது.

மேலும் மகாபாரதத்தில் அசுதினாபுரத்தை ஆண்ட திருதராட்டிரன் கண்பார்வையற்ற அரசனாகக் காணப்படுகிறார். அனைத்து ஊன கதாபாத்திரங்களிலும் இந்த நிலை சிறந்ததாகக் கருதப்படுகிறது. ஏனெனில் ஒரு கண்பார்வையற்ற அரசன் தைரியமும், திறமையும் மிக்கவராகக் காணப்படுகிறார். ஒரு நாட்டையே கட்டி ஆளும் ஆளுமை திறன் மிக்கவராகவும் தென்படுகிறார். நாட்டுமக்கள் அனைவரும் அவரால் இந்நாட்டை சிறந்த முறையில் ஆட்சி செய்ய இயலாது என்று கருதிய போதிலும் அம்மன்னர் என்னால் முடியும் நான் இந்த நாட்டைச் சிறப்பாக ஆட்சி செய்வேன் என்று உறுதிபடுத்தி காட்டியவர்.

அடுத்ததாக ஊனமுற்றோர்கள் மனத்தில் காணப்படும் எண்ணமானது. அக்காலத்திலிருந்தே இந்த நாட்டு மக்கள் ஊனத்தை ஒதுக்கி வைத்துள்ளனர் என்பதாகும். இந்தக் கருத்தை பொய்யாக்கும் வகையில் பித்துருபக்தி நாடக கதையில் வரும் தன் கண்பார்வையற்ற பெற்றோரைத் தன் தோளில் சுமந்து சென்ற மகனின் கதை விளங்குகிறது.

கம்பராமாயணத்தில் வரும் கூனியின் பேச்சைக் கேட்ட கைகேயி. தான் பாசமாக வளர்த்த இராமனையே 14 ஆண்டுகள் வனவாசம் புக வைத்தது. இந்தக் கதை ஊனமுற்றவரின் தீயசெயலாகக் காட்டப்பட்டாலும் ஒரு மிகப்பெரிய மாற்றத்தைக் கம்பராமாயணத்தில் ஏற்படுத்திய பங்கு கூனியுடையது என்று கருதப்படுகிறது. இவ்வாறு பல காப்பியங்களில் திறமையையும் தேர்ச்சியும் உடையவராக ஊனமுற்றோர்கள் காட்டப்பட்டுள்ளனர். இதிலிருந்து ஊனம் திறமைக்குத் தடையல்ல என்பதைக் கருத்தாக்கம் செய்கிறது.

## முடிவுரை

வாழ்க்கை இப்படி அமைகின்றது எனக்காட்டும் முந்தைய நிலை, வாழ்க்கை இவ்வாறு அமைய வேண்டும் என நெறிப்படுத்தும் வாழ்வில் அறநூல்கள் பொருந்தி உள்ளது. இவற்றால் சமூக உறுப்பினராக அமையும் பல்வகை மக்கட் பகுதியினர், படிநிலையினர், தகுதியினருக்கு ஆனவற்றை உறைக்கும் இவ் அறநூல்கள் பாதிக்கப்பட்டோரான ஊனரை பற்றி ஓரளவேனும் அதிகமாகச் சிந்திக்கலாம் என்ற எதிர்பார்ப்பு இவ்வணுகு முறையைத் தேவையாக்குகிறது.

"அரியது கேட்கின் வரிவடிவேலாய்
அரிது அரிது மானிடர் ஆதல் அரிது
மானிடம் ஆயினும் கூன் குருடு செவிடு
பேடு நீங்கி பிறத்தல் அரிது"

ஊன நிலையை ஒரு குறையாக கருதாமல், ஊனமுற்றோரை ஒதுக்காமல் கைவிடாமல், பணியளித்துப் பாதுகாத்து மனிதபிறவியின் பயனை அரங்கேற்றிய நிலையினை இந்தச் சங்க இலக்கியங்களில், அறநூல்களில், காப்பியங்களில் இருந்து நாம் உணர முடிகிது.

"அக்காலத்தின் நிழலை
இக்காலத்தின் நிசமாக்குவோம்"

இவ்வாறான தமிழ்க் காப்பியங்களை ஊனமுற்றோரின் மனத்தில் விதைகளாய் விதைக்கப்பட வேண்டும். அந்த விதைதான் பிற்காலத்தில் மரமாகி தன்னம்பிக்கையும் தைரியமும் கலந்த ஒன்றாய் தலைத்து நிற்கும். பின்னர் மரத்தின் வேர் எவ்வாறு நிலத்தில் உறுதியாகப் பின்னப்பட்டுள்ளதோ, அதுபோல ஊனமுற்ற குழந்தைகளின் வாழ்க்கையும் இவ்வுலகத்தோடு பின்னப்பட்டுவிடும். பின்னர் அவர்களும் மக்களோடு மக்களாய் கலந்து விடுவார்கள். இவ்வாறு அனைவரும் ஒன்றாகக் காரணமாக விளங்கிய அந்த விதை சங்க இலக்கியங்களில் ஊனமுற்றோர் என்ற தமிழ் காப்பியங்களே ஆகும். எனவே விதை விதைப்போம். அவர்களது வெற்றிக்கு நாமே வித்திடுவோம்.

# 94. கண்ணதாசன் கதையும், கவிதையும்



கவிஞர் **இ.வேல்முருகப்பெருமாள்**
*இலந்தையடிதட்டு*
*கன்னியாகுமரி மாவட்டம்*

## முன்னுரை

கலைகளில் சிறந்தது கவிதைக் கலை. கவிதை உள்ளத்தில் இருந்து அருவியாக ஊற்றெடுக்கிறது. உள்ளத்தில் உள்ளது கவிதை. இன்ப உருவெடுப்பது கவிதை. தெள்ளத் தெளிந்த தமிழில் உள்ளம் தெரிந்துரைப்பது கவிதை என்று அழகாகக் கூறுவர் கவிமணி. கவிதை ஒரு மனிதனின் சோகத்தால் உருவாகலாம். இன்பத்தால், உருவாகலாம். சான்றோர் கவி புனையுங் கவி சகல உயிர்களுக்கும் இன்பம் பயக்கும். சான்றோர் கவிதை இறந்த உடலை உயிர்கொடுத்து எழுப்ப வல்லது. இசைக் கவிஞர் கண்ணதாசன் சிறுகூடல் பட்டி தந்த சிங்கம். இளம் வயதிலேயே கவிதைக்குத் தங்கம் சிறு வயதிலேயேப் பாடல் புனையும் எண்ணம் கொண்டவராகத் திகழ்ந்தார். சிறுவயதில் சிறுகூடல்பட்டி மலையரசி தனக்கு கவிதை புனையும் ஆற்றல் தந்ததாகக் கூறுவார்கள். கண்ணதாசன் ஒரு பிறவிக் கவிஞன். அவரது உள்ளம், அன்பு உள்ளம், பெரிய உள்ளம் ஆகும்.

## அவரது பாவகை

தத்துவப்பாடல்களும், காதல் பாடல்களும், கற்பனை நயமிக்க பாடல்களும், பூரணத்தை அடியொற்றிய சிந்தனைப் பாடல்களும், தனிப்பாடல்களும் இப்படி அத்தனைப் பாடல்களிலும் முத்திரை பதித்தவர் கண்ணதாசன்.கம்பனையும் செல்லியையும், வோட்சுவொர்த்தையும், சாண்மில்டனையும் நினைவுபடுத்தும்படி அவரது பெருவாரியான பாடல்கள் இருக்கும். கண்ணதாசன் பாடல்களில் எதுகை, மோனை நயமிக வரும்.

"கண்ணின் கடைப்பார்வை
காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரருக்கும்
மாமலையும் ஓர் கடுகாம்"

என்று பாரதிதாசன் பண்புடன் எடுத்துக் காட்டுகிறார். கண்ணதாசன்